கோயம்புத்தூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு.ர.பாலமுரளி, எம்.ஏ., பி.எட்.,
ப. மு. எண்.3963/அ–1/2024, நாள். 03 .05.2024.
சித்திரை– 20 , திருவள்ளுவராண்டு – 2055

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக்கல்வித்துறை – இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி IV தேர்வு –தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவருக்கு நியமன ஆணை வழங்கியது – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை: 1) அரசாணை (நிலை) எண்.151, பள்ளிக்கல்வி 1(1) துறை, நாள் 09.09.2022
2) தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை– 6 ந.க.எண். ந.க.எண்.56703/அ4/இ1/2023 நாள் 21.09.2023
3) முதன்மைக் கல்வி அலுவலர், கோயம்புத்தூர் செயல்முறைகள் ந.க்.எண். 12085/அ–1/2023 நாள்: 27.09.2023
4) தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, அக்கநாயக்கன்பாளையம் கடிதம் ந.க.எண் 69/2024 நாள் 22.04.2024

**********

தமிழ்நாடு அமைச்சுப்பணியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV தேர்வு மூலம் பள்ளிக்கல்வித் துறைக்கு தேர்வு செய்யப்பட்டு பார்வை 3–ல்காண் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நேரடி நியமன ஆணை வழங்கப்பட்ட கீழ்காண் பணியாளருக்கு கீழே கலம் (4)ல் குறிப்பிட்டுள்ள தேதி முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் பள்ளி / அலுவலகம் (திருவாளர்) | முதன்முதலில் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.வா.மு. மருதுபாண்டியன், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, அக்கநாயக்கன்பாளையம். கோயம்புத்தூர் மாவட்டம் – 641 669 | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

**நிபந்தனைகள் :**

1. பணிவரன்முறை செய்யும் நாள் முதல் 3 ஆண்டுகள் தொடர் பணிக்காலத்தில் 2 ஆண்டுகள் தகுதிகாண் பருவம் முடித்தல் வேண்டும்.
2. தகுதிகாண் பருவ காலத்தில் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.
3. தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படை பயிற்சி பெறுதல் வேண்டும்.

மேற்காண் பணிவரன்முறை ஆணை மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் இந்நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள தொகுதி IV –ன்கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டும், அன்னாரின் தமிழ்வழி சான்று மற்றும் 10ம் வகுப்பு மதிப்பெண் சான்று ஆகியவைகள் உண்மைத்தன்மை வாய்ந்தது என்ற சான்றுகளின் அடிப்படையிலும் வழங்கப்படுகிறது. இப்பொருள் குறித்தான பதிவுகள் சம்பந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : – அசல் பணிப்பதிவேடு.

முதன்மைக் கல்வி அலுவலர்,
கோயம்புத்தூர் – 641 001.

பெறுநர்
திரு.வா.மு. மருதுபாண்டியன்,
இளநிலை உதவியாளர்
அரசு உயர்நிலைப்பள்ளி, அக்கநாயக்கன்பாளையம்,
கோயம்புத்தூர் மாவட்டம் –641 669. (தலைமை ஆசிரியர் மூலம்)

நகல் : தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, அக்கநாய்க்கன்பாளையம்,
கோயம்புத்தூர் மாவட்டம் – 641 669